# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.

## S.C.No.89/2018

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.6** |
| **Name** | **:** | **திரு.திருஞானம்** |
| **Father's Name** | **:** | **வெங்கடேசன்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரிகள் 2 முதல் 4 ஆஜர். 1ஆம் எதிரி இறந்துவிட்டார்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.10.2023.**

**முதல் விசாரணை -**

**நான் வடகல்பாக்கத்தில் குடியிருக்கிறேன். தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். இறந்துபோன பிரேம்குமாரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. இவ்வழக்கை பற்றி எனக்கு தெரியாது. என்னை இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் விசாரிக்கவில்லை.**

**சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

வடகல்பாக்கம் கிராமத்தில் எனக்கு நிலம் உள்ளதா என்றால் உள்ளது. 13.12.2007 அன்று நான் எங்கிருந்தேன் என்றால் ஞாபகம் இல்லை. பச்சையப்பன் நிலம் தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தபோது பச்சையப்பன் நிலத்தில் ஒரு நபர் ரத்த காயத்துடன் கத்தியால் வெட்டப்பட்டு இருந்ததாக சொல்லியிருந்தேன் என்றால் அது பற்றி தெரியாது.

போலிசார் என்னை விசாரித்தபோது வாக்குமூலத்தில் உள்ளவாறு வாக்குமூலம் அளித்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எனக்கு எதிரிகள் யார் என்றே தெரியாது.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரி தான். அன்று திருவிழா நாள் என்றால் எனக்கு எதுவும் தெரியாது. இரவு தான் வீட்டிற்கு வந்தேன். சாமிக்கு ஆரத்தி கொடுத்துவிட்டு வீட்டில் இருந்தேன் என்றால் சரி தான். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரி தான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.